RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s815

# சங்ககால ஆடவர் வாழ்க்கை

**அ. ஐயப்பன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருத்திப்பட்டு, ஆவடி, சென்னை 600071. தமிழ்நாடு, இந்தியா

# Men's Life in Sangam Period

**A. Iyappan [a, *]**

[a] Department of Tamil, Mahalashmi Women's College of Arts and Science, Paruthippattu, Avadi, Chennai-600071, Tamil Nadu, India

* Corresponding Author: Iyappanvels5164@gmail.com

Received: 27-04-2021
Revised: 14-05-2022
Accepted: 27-05-2022
Published: 20-07-2022

**ABSTRACT**

This study on the life of men in the Sangam period explains the life norms that the men in the Sangam period depended on their profession and through their profession, they earned income and strived to achieve family honour. There were many professions such as brahmins (Antaṇar), king, shepherd, salt merchant, farmer, butcher, carpenter, fisherman, and merchant. Through this article, we can learn about the divisions that existed at that time. It can be known that the cultivators who lived in the lands of Kurinji, Mullai, Marutham, Neithal and Palai were farmers, fishermen and hunters (Eyinar)who excelled in business. Although the people differed among themselves in occupations according to castes, they lived in close contact with each other in the five types of land. The study clarifies that the way of life of the Sangam people is based on the barter system of selling the goods available in one land and buying the goods they need in another land. Although there sare various differences in professions, the people of the Sangam period have been living together. Men of the Sangam era have been well-known for their bravery in social organizations and in helping the government. Men of the Sangam age lived a pure and happy life, distinguished by heroic status, morals and hospitality.

**Keywords:** Sangam Period, Sangam Men life, Business, Occupation

## முன்னுரை

சங்க காலம் ஒரு பொற்காலம் என்பதற்குச் சங்ககால மக்களின் நாகரிகமும் பண்பாடும் மிக சிறந்த உதாரணமாகும். காதல் சார்ந்த அகவாழ்விலும், வீரம் சார்ந்த புற வாழ்விலும் சங்ககால மக்கள் சிறந்து விளங்கினர்.

'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற நிலையில் உடல் வலிமை உடையவர் ஐவகை நிலங்களிலும் பல்வேறு தொழில் முனைவோராக விளங்குகின்றனர். தச்சர், கொல்லர், கம்மியர் போன்றோர் தொழில் வழியே பல்வேறு பொருள்களையும் ஐவகை நிலத்தார்க்கும் வேண்டிய கருவிகளை படைக்கும் தொழிலில் ஈடுபட்டனர். ஆடவர்களின் வாழ்வியலை விளக்குவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## மக்கள் வாழ்க்கை

உழவர்கள் உழவுத் தொழிலில் நெல் முதலிய தானியங்களை விளைவிக்கின்றனர் கொல்லர்கள்

படைக்கருவிகளை தயார் செய்து போர்க்கருவிகள் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுகின்றனர். வண்ணார் அழுக்கான ஆடைகளை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர் (Chidambaranar Samy, 2008). குதிரைப்படை ,யானைப்படை ,தேர்ப்படை காலாட்படை போன்ற படைகளில் மறவர்கள் ஈடுபடுகின்றனர். ஐவகை நிலங்களில் வாழும் மக்கள் ஆநிரை மேய்த்தல், ஆநிரை காத்தல், வேட்டையாடுதல், தினை, நெல் போன்ற தானியங்களை உற்பத்திச் செய்கின்றனர் (Ramathan, 1975). அரசனுக்கு உதவும் வகையில் அமைச்சர்கள் துணை புரிகின்றனர். வணிகர்கள் வணிகத்தில் ஈடுபாடு கொண்டு விளங்குகின்றனர் (Annie Thomas, 2001). கள்ளுண்டு மகிழ்ந்தாலும் புலால் உண்ணுதலும் பண்டைத் தமிழர்களுடைய வாழ்வியலில் காணப்படும் நிகழ்வாகும்

## ஐவகை நிலத்தவர்கள்

ஐவகை நிலத்தின் மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டு அந்த நில அமைப்பிற்கு ஏற்ற வகையில் தங்கள் வாழ்வியல் சூழலை வடிவமைத்துக் கொண்டார்கள். குறிஞ்சி நிலமக்கள் கானவர் என்று அழைக்கப்பட்டனர். கானவர் என்ற இச்சொல் திருமுருகாற்றுப் படையிலும் குறிஞ்சிப்பாட்டிலும், நற்றிணையிலும் இடம்பெற்றுள்ளது இதனை

'கொடுந்தொழில் வல்வில் கொலை இயகானவர்' (Mohan, 2007) என்றும்

"அந்தி அந்தணர் அயர கானவர் என்றும்

கொடு விற் கானவன்"

என்றும் முறையே திருமுருகாற்றுப்படையும் குறிஞ்சிப்பாட்டும் நற்றிணையும் குறிஞ்சிநில மகனைக் கணவர் என்ற சொல்லால் அழைத்தல் நிலத்தின் பெயரால் அமைந்ததாகக் கருத முடிகின்றது (Balasubramanian, 2007).

## குறிஞ்சி

குறவர் என்ற சொல்

'தேம்பிழி நறவின் குறவர் முன்றில்'

என்று குறிஞ்சிவாழ்நிலத்து ஆடவர் பெயர்களில் ஒன்றெனக் கருத முடிகின்றது (Annamalai, 2004). இவர்கள் மலைப்பகுதிகளில் தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டார்கள் .மலை வாழ்க்கைக்கு ஏற்ற உடல் வலிமையைப் பெற்று இருந்தார்கள் .இவர்கள் வீட்டு முன் பகுதியில் வேங்கை மரங்கள் வளர்ந்தோங்கி இருந்தன. இவர்கள் காட்டில் வாழ்ந்தமையால் வில்லாற்றல் பெற்றவர்களாக விளங்கினர். இதனை

"சிலை நவில் எறுழ்த்தோள் (Mohan, 2007)

வன் கைக் கானவன்

கொடுந்தொழில் வல்லில் கொலை இய கானவர்"

என்ற பாடல் வரிகளால் சிறப்பிக்கப்படுகின்றனர். வேட்டையாடுதல் இவர்களுடைய முக்கியத் தொழிலாக அமைந்திருந்தது (Balasubramanian, 2007). தினை பயிரிடுதல், உழவுத்தொழில் போன்றவற்றில் சிலர் ஈடுபட்டனர்.

## முல்லை

முல்லை நில மக்கள் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆடு மாடுகளை வளர்த்தலே இவர்களுடைய முக்கிய தொழிலாகும் .குறுகிய கால்களை உடைய குடிசைகளில் வாழ்ந்தனர். வீட்டு முன் மாடுகளைக் கட்டுவதற்குரிய தாம்புகள் கட்டப்பெற்ற சிறுமுளைகள் காணப்பட்டன. தீக்கடை

கோலினால் தீயை மூட்டினார். ஆடுகளைக் கட்டுவதற்குரிய தடியைக் கையில் ஊன்றிக்கொண்டிருப்பர். ஆடு மாடுகளை ஓட்டும் காலத்துச் சீழ்க்கை ஒலி இதனை

'மடிவாய்க்கோவலர்' (Mohan, 2007)

'மடிவாய் இடையன்'

என்று குறிப்பிடுவதனால் அறியலாம் (Rasamanickam, 2002).

'ஒன்றுஅமர் உடுக்கை கூழ்இடையன் (Mohan, 2007)

பாசிலை தொடுத்த உவலைக் கண்ணி

மாசு உண் உடுக்கை மடிவாய் இடையன்'

இப்பாடல்கள் அணியும் மலர்மாலையைச்சுட்டுவன. புல்லாங்குழல் ஊதுவர். யாழினை வாசித்தலும் உண்டு (Rasamanickam, 2002). தமது பொருட்களை உறியில் வைத்துக் கொண்டு செல்வர். தினை, வரகுச்சோறு கூழ் பால் இறைச்சி ஆகியன உணவுப் பொருளாகும்.

'உறிக்கா ஊர்ந்த மறுப்படுமயிர்ச்சுவல்' (Mohan, 2007).

## மருதம்

உழவுத் தொழிலே முக்கியத் தொழிலாகும் .உழுதுண்டு வாழ்வதே தொழிலாக கொண்ட மக்கள் வாழும் இடம் இளைஞர்கள் ஏறுதழுவியே பெண்ணைத்திருமணம் செய்வர். ஆயரும் ஆய்ச்சியரும் குரவைக் கூத்தாடி வணக்கம் செலுத்துவர்.

'குருஉக் கண் கொலை ஏறு கொள்வான்'

கையறு நிலைத்துறையில் அமைந்த சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பி யார் பாடல் மக்கள் மிகுதியாக வாழும் இடம் மருத நிலமாகும் இங்கு மக்கள் சேர்ந்து வாழுமிடம் சிற்றூர் பேரூர் என்று வழங்கப்பட்டது. சிறுவர்கள் அழகிய சிறுதேர்களை உருட்டி விளையாடினார் (Varatharasan, 1976) . மக்களுக்குத் தேவையான பல பொருள்களின் இந்நிலத்தில் கிடைத்தது உழவர்கள் நெல்லையும் கரும்பையும் பயிர் செய்தார்கள் ஏர்களில் உழவுத் தொழிலில் பயிற்சி பெற்ற நல்ல எருதுகளை உழுதனர்.

'ஈரச் செவ்வி உதவின ஆயினும்

பல எருத்துள்ளும் நல் எருது நோக்கி

வீறு வீறுஆயும் உழவன் போல'

என்ற பாடலில் அறியலாம் (Varatharasan, 1976).

நெற் குவியல்கள் மலைகளைப் போலக் குவிந்தன. களத்திற்கு வரும் இரவலர்க்கு நெல்லை வாரியும் வழங்கினர் .

'பெருங் களம் தொகுத்த உழவர் போல

இரந்தோர் வறுங் கலம் மல்கவீசி'

களத்திற்கு வருவோருக்கு நெல் வழங்கியதோடு உணவும் அளித்தனர். கள்ளையும் மீனையும் நெல்லுடன் வழங்கினார் (Annamalai, 2004).

## நெய்தல்

நெய்தல் நிலமக்கள் கடற்கரையை அடுத்தபெரும் மணற்பரப்பில் கடல் வளத்தை நம்பி வாழ்ந்தார்கள். இவர்களின் குடிசைகள் தாழைநாரால் கட்டப்பட்டு தருப்பைப் புல்லால் கூரையை

அமைத்திருப்பார் வீடுகளின் முன் தூண்டில் கம்புகள் வைக்கப்பட்டிருக்கும். குடிசையின் முற்றத்தில் மீன் பிடிக்கும் வலைகள் இருக்கும்.

நிலத்தில் உள்ள பரதவர்கள் குளங்களிலும் நீர் நிலைகளிலும் உள்ள மீனைப் பிடிப்பார்கள். மகளிர் மீனை வெயிலில் உலர்த்துவார் அப்பொழுது அதைக் கவர வரும் பறவைகளை ஓட்டுவர்

'கடுந் தேர்ச் செல்வன் காதல் மகனே

நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி

இனப் புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ'

பரதவ மகளிர் மீன்களைச் சுமந்து சென்று அடுத்துள்ள மருத நிலத்து ஊர்களில் விற்று நெல் முதலிய பொருள்களைப் பண்டமாற்றாகப்பெற்று வருவர் (Balasubramanian, 2004).

'உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் மூசோறு

அயிலை துழந்த அம்புளிச்சொரிந்து

கொழுமீன் தடியோடு குறுமகள் கொடுக்கும்'

உப்பு விளைத்தல் இவர்களின் பெருந்தொழிலாகும். உப்பு வணிகர்களின் வண்டிகள் வரிசையாகச்செல்லும். உமணர்கள் ஊர் திரும்பும் போது அவரோடு வரும் குரங்குகளும் தம் சிறுவரோடு கிலுகிலுப்பைக் கொண்டு விளையாடுகின்றன (Annamalai, 2004). இவர்களின் உணவு அரிசி, கூழ், மீன்கள் முதலியன. சுறா மீனைக் கடவுளாக வழிபடும் தாழை மலரையும் புன்னை மலரையும் அணிவர் மீன்பிடிக்கச் செல்லாத காலத்து ஆடவர்கள் தமது மகளிரோடு கடற்கரை வழிபாடு செய்தும் கள்ளுண்டும் பொழுதைக் கழித்தனர்.

### பாலை

முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் திரிவதால் உண்டாவது பாலை நிலமாகும்

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'

பாலையில் வெயில் மிகுதியாகக் காணப்படும் காலை நிலத்தில் உள்ள பரல் கற்கள் வேல் போல் அங்கு நடப்பவரின் கால்களைக் குத்தும். இந் நிலத்து வாழும் மறவர்கள் உடல் வலிமை படைத்தவர்கள் புலி போலும் பார்வை உடையவர்கள் அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள் இவர்களுடைய ஆடை வெந்நிறமாக அமைந்திருக்கும் காலில் தோல் செருப்பும் அணிந்திருப்பர். வேட்டையாடுதல் இவர்களின் முக்கியத் தொழில் ஆகும் ஆநிரைகளை கவர்தலும் பச்ச வழிப் போக்கர்களை வருத்திப் பொருளைப் பறிப்பதும் உண்டு (Venkatasamy Nattar, 2018).

## தொழிற் கருவிகள்

தத்தம் வாழ்க்கைக்குத் தேவையான கருவிகளைச் செய்து அளிக்கும் பணியில் அத்துறையைச் சார்ந்தோர் ஈடுபட்டனர். இத்தகையோர் கம்மியர், தொழுவர் என்ற பொருளில் கையாண்டனர். கைத் தொழில் செய்வோர் கம்மியர் என்றும் தொழில் செய்வர் தொழுவர் என்றும் அழைக்கப்பட்டனர். உடல் வருத்தி உழைப்புக்கேற்ற வலிமையைப் பெற்றிருந்தனர். இரும்பு போன்ற உடல் வன்மை மிக்கவர்களை

## கொல்லர்கள்

இரும்புத் தொழிலில் ஆண்கள் ஈடுபட்டனர். வன்மையான தொழில் ஆதலால் ஆண்களே இத்தொழிலில் ஈடுபட்டனர் இரும்பு அடிப்படை விலையை ஏற்றுவதற்கு உரிய தொட்டி சூடான பொருளை எடுப்பதற்கு உரிய கருவி ஆகியவற்றை நற்றினை சுட்டுகின்றது.

'இரும்பு செய் கொல்லன் வெவ் உலைத் தெளித்த

தோய் மாடற் சில்நீர் போல

நோய் மலி நெஞ்சிற்கு ஏமம் ஆம் சிறிதே' (Balasubramanian, 2007)

இரும்பை உருக்குவதற்கு உலைகள் மிதித்தும் ஊதியும் அமைக்கப்பட்டிருந்தன என்பதை

'நல் அரா நடுங்க உரறி கொல்லன்

ஊது உலைக் குருகின் உள் உயிர்த்து'

என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடும். உலையில் இருந்து வெளிப்படும் பெருங்காற்றைத் துன்பத்தில் இருப்பவர் வெளிவிடும் பெருமூச்சுக்கு ஒப்பிடுவர் (Balasubramanian, 2007).

போருக்கு உரிய கருவிகளை வைத்துக் கொடுப்பதும் களிறுகளின் கொம்புகளுக்கு பூண் அமைப்பதும் யானைகளைக் கட்டுவதற்குரிய சங்கிலிகளைச் செய்வதும் இவர்களுடைய பணியாகும்

'மென்பிணி வன்தொடர் பேணாது காழ் சாய்த்து

கந்து நீத்து உழிதரும் கடாஅ யானையும்' (Mohan, 2007).

என்றும்

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே (Rasamanickam, 2002)

பாடாண் திணையில் வாள்மங்கலம் துறையில் அமைந்த பாடல்

'இவ்வே பீலி அணிந்து மாலை

கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து

கடியுடை வியல் நகர்வ்வே அவ்வே'

என்னும் குறிப்பால் போர்க்கருவிகள் செப்பம் செய்திடக் கொல்லன் உலைக்களத் தேகிடைப்பதனைக் காட்டுகிறார் (Rasamanickam, 2002). கொல்லுத் தொழில் செய்த கொல்லர்கள் அரசனுடைய போர்படைக்குத் தேவையான கருவிகளைச் செய்வதில் பெரிதும் ஈடுபட்டனர்.

## தச்சர்

நுட்பமான மர வேலைப்பாடுகளைச் செய்யும் பணியில் ஆடவர்களே முழுமையும் ஈடுபட்டனர். இவர்கள் தச்சர் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது மரம்கொள்தச்சன் கைவல் சிறார் (புறநானூறு 206) என அழைக்கப்பட்டனர் மழு, உளி, முடுக்குகருவி ஏறிகுறடு, சுத்தியல் போன்றவை இவர்களுடைய ஆயுதங்களாகும் .உழு கலப்பைகள் செய்வதோடு தேர் வண்டி போன்ற ஊர்திகளையும் செய்தனர்.

'எடுத்து எறி ஞாட்பின் இமயான் தச்சன்

அடுத்து ஏறி குறட்டினின்று மாய்ந்தனனே' (Rasamanickam, 2002)

அரண்மனையின் கதவுகள் மரத்தால் செய்யப்பட்டு இருந்தன என்பதை

'கைவல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து

ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை'

என்று சிறுபாணாற்றுப்படை மூலமும் அறிய முடிகின்றது (Mohan, 2007).

## பொற்கொல்லர்

பொன்னை உருக்கி அதன் மூலம் வேலைப்பாடுகளைக் கொண்ட ஆபரணங்களைச் செய்பவர்கள் பொற்கொல்லர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்பதை

'சூடுறு நன்பொன் சுடர் இழை புனை நரும்'

என்பதால் அறியலாம் (Mohan, 2007).

பொன்னை கண்டறியப் பொற்கொல்லர்கள் உரைகல் வைத்திருந்தனர்.

'பொன் காண் கட்டளை கடுப்ப கண்பின்'

என்பதற்கு சான்றாக பெரும்பாணாற்றுப்படை கூறுவதை அறியமுடிகிறது (Mohan, 2007).

## செம்பு வேலைகள் செய்வோர்

செம்பை வார்த்து உருக்கி பானை முதலிய கலங்களைச் செய்யும் உலோகத்தால் செய்யப்படும் பாத்திரங்களைக் கடைந்து அழுத்தம் கொடுப்பர் கடையும் போது மின்னல் போன்று தோற்றமளிக்கும்

'மண்திணி ஞாலம் விளங்க கம்மியர்

செம்பு சொரி பானையின் மின்னி'

என்கிறார் (Balasubramanian, 2007). பொன், முத்து, மணி, பவளம் ஆகியவற்றைக் கொண்டு விலை மதிப்புடைய ஆபரணங்களைச் செய்தனர் என்பதை

'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய

மாமலை பயந்த காமரு மணியும்

இடைபடச் சேய ஆயினும் தொடை புணர்ந்து

அருவிலை நன்கலம் அமைக்கும் காலை

ஒருவழித் தோன்றி யாங்கு'

என்று குறிப்பிடும் அணிகளுக்கு உதவிய பொருள்களைப் புறநானூறு சுட்டிச்செல்கின்றது (Rasamanickam, 2002). கொடுமணம் என்னும் ஊர்நல்ல அணிகலன்களுக்குப் பெயர் பெற்று விளங்கியது என்பதை பதிற்றுப்பத்தில்

'கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு

பந்தப்பெயரிய பேர் இசை மூதூர்' (Rasamanickam, 2002).

என்று கூறுவதாக அறியலா கிறது சங்கு போன்றவற்றை அறுத்துச் சுத்தம் செய்தனர் என்பதை

'வேளாப் பார்ப்பான் வாளரந்துமித்த

வலைகளைந்ஒழிந்த கொழுந்தின் அன்ன'

என்று அகநானூறு குறிப்பிடுகிறது (Annamalai, 2004).

## குயவர்

சங்க காலத்தில் மக்கள் மண்பாண்டங்களைப் பெருமளவில் பயன்படுத்தினர். பல நிலைகளில் மண்ணால் செய்யப்பட்ட பொருள்களையே பயன்படுத்தினார்கள் இறந்த உடலை தாழிகள் கொண்டு அடக்கம் செய்தனர்.மண்பானைகள் நெருப்பில் வைத்து சுடப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட்டன.

'கவி செந்தாழிக் குவி புறத்து இருந்த

செவிசெஞ்சேவலும் பொகுவலும்வெருவா?'

என்று வெண்ணிக்குயத்தியார் குறிப்பிடுகின்றார் (Rasamanickam, 2002). .மேலும் உழவுத் தொழிலும் முக்கியத் தொழிலாகக் கொண்டு மக்கள் விளங்கினார். வன்மையான தொழில்களில் ஆண்களே பெரிதும் ஈடுபட்டனர்.

## பிற தொழில் செய்வோர்

மக்கள் பருத்தித்தொழிலில் ஈடுபட்டனர் .இதனை பருத்தி வேலிச் சீறூர் என்பதை புறநானூறு

'பருத்தி வேலிச் சீறூர் மன்னன்

உழுத்தர் உண்ட ஓய் நடைப் புரவி'

குறிப்பதில் இருந்து அறியலாம் (Rasamanickam, 2002). முதிர்ந்து வெடித்த பருத்தி காய்களில் இருந்து கிடைக்கும் பஞ்சை கொம்பால் அடித்து சுத்தம் செய்தனர்.இரவுக் காலங்களில் பட்டையை நீக்கி நூல் ஆடைகளை அணிந்தார்கள் மக்கள் என்பதை

;பட்டு நீக்கித் துகில் உடுத்தும் மட்டு நீக்கிமது மகிழ்ந்தும்'

என்னும் செய்தி புலப்படுத்துகிறது (Mohan, 2007).

## சிற்பக் கலையில் தேர்ந்தவர்கள்

சிற்பக் கலையில் வல்லவர்கள் கூடிமன்னர் கேற்ற வகையில் மனை வகுத்தனர்

'நூலறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு

தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி

பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து'

பல நிலைகளை உடைய பெரிய மாளிகைகளோடு சிறிய இல்லங்களும் தச்சர்களால் ஆக்கப்பட்டனர் .பெரிய மாளிகைகள் ஓவிய சிறப்புடன் சிறந்து விளங்கின (Mohan, 2007).

'சிற்றில் நல் தூண்' என்று புறநானூறு குறிப்பிடுகிறது (Rasamanickam, 2002).

## ஓவியர்கள்

துகிலியைக் கொண்டு அரக்கு முதலிய வண்ணங்களைச் சேர்த்து சித்திரம் வரைந்தனர் இவர்களை கண்ணுர் வினைஞர் என்று பெயரிட்டு அழைத்தனர்.

'எவ்வகைச்செய்தியும் உவமம் காட்டி

நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்

கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடி'

என்றும் மேலும் 'ஓவத் தன்ன புனை நல் இல்' என்று குறிப்பிடுவதை உணரலாம் (Mohan, 2007).

## அரசுப் பணிகளில் துணை புரிவோர்

அரசருக்கு அறிவுரை அளிக்கும் அமைச்சர் முதறகொண்டு அரண்மனையில் குற்றேவல் பணிகள் வரை ஆடவர்கள் பலநிலைகளில் அரசருக்கு உதவி செய்தனர். அமைச்சர்களுக்கு காவிதி, ஏனாதி

போன்ற பட்டங்களை மன்னன் வழங்கினார் அறத்தில் வழுவாது அரச காரியங்களை அறிவுறுத்தி வந்தனர்.

செம்மை சான்ற காவிதி மாக்களும்

என்கிறார் மாங்குடி மருதனார் அமைச்சரோடு அரசியலில் உதவிட புரோகிதர் சேனாதிபதி தூதர் ஒற்றர் போன்ற பணிகளில் ஆடவர்கள் ஈடுபட்டனர் அரசனின் மெய்க்காப்பாளர் பணியில் ஆடவர்கள் ஈடுபட்டிருந்தனர் (Mohan, 2007). இவர்கள் மன்னர்கள் பாசறையில் தூக்கமின்றி அரசனைக் காத்தமையை முல்லைப்பாட்டு குறிப்பிடுகின்றது.பொழுதினை அளந்துரைப்போர்க்கு நாழிகைக் கணக்கர் என்ற பெயர். மன்னன் பாசறையில் இருந்த போது அரசனுக்கு பொழுதை அளந்து கணக்கிட்டு உரைக்கும் நாழிகைக் கணக்கர் இருந்தனர். என்று முல்லைப்பாட்டு எடுத்துரைக்கின்றது

## காவல்

நாடு காவலுக்கு துணையாக நால்வகைப் படைகள் இருந்தன

நெடுநல் யானையும் தேரும்

படை அமை மறவரும் உடையம் யாம்

கடுஞ் சினத்த கொல் களிறும் கதழ் பரிய கலி மாவும்

நெடுங் கொடிய நிமிர் தேரும் நெஞ்சுடைய புகன் மறவரும் என

நான்குடன் மாண்ட தாயினும் என்று வரும் அடிகள் நான்கு படைகளும் மாட்சிமை பெற்று விளங்கியமையைச் சுட்டும் (Rasamanickam, 2002).

காற்றை விட வேகமாகச் செல்லும் வகையில் குதிரைகளை பழகினார். அக்குதிரைகளையே போர்க்களத்தில் பயன்படுத்தினர்.

'மாவா ராதே மாவா ராதே

எல்லார்மாவும் வந்தன'

என்பதிலிருந்து அறியமுடிகிறது (Rasamanickam, 2002). யானைகளைப் பிடிக்கவும் அவைகளைப் பழக்கித் தொழிலில் ஈடுபடுத்தவும் அவைகளுக்கு வேண்டிய உணவு வகைகளை அளிக்கவும் தொழிலாளர்கள் இருந்தனர். குழிகளை வெட்டி பழகிய யானையை வைத்து யானைகளைப் பிடித்தனர். யானையை பழகும் இடத்தில் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தினர்.

'கவை முட் கருவியின் வடமொழிப் பயிற்சி

கல்லா இளைஞர் கவளம் கைப்ப' (Mohan, 2007).

## போர் வீரர்கள்

வலிமைமிக்க ஆடவர்கள் போர்ப் படையில் பணிபுரிந்தனர். கச்சையில்வாள் முதலியவற்றை அணிந்து மார்பில் கவசம் பூண்டு வில் வேல் போன்றவற்றை உடையவராக விளங்கினார் எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றை அழித்துச் செல்லும் மறம் பூண் வாழ்க்கையை உடையவர் இவர்களுக்குரிய ஆயுதங்களைக் கொல்லர்கள் வடித்துள்ளனர்

'வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே'

போருக்கு செல்லும் இவர்கள் கள் முதலியவற்றை அருந்தினர் பின்னர் வெற்றி பெற்ற வீரர்கள் பொற்பூபோன்றவற்றைப் பரிசாகப் பெற்றனர். நான்கு வகையான படைகளும் அரசின் தலைநகரில் இருந்தன (Rasamanickam, 2002).

'பனைமீன் வழங்கும் வளை மேய் பரப்பின்

வீங்கு பிணி நோன் கயிறுஅரிஇ'

என்பதையும் உணரமுடிகின்றது (Mohan, 2007).

## வணிகர்கள்

நகரங்களில் உள்ள நாளங் காடிகளிலும் அல்லங்காடிகளிலும் பல பொருள்களை விற்பனை செய்தனர்.

'பணிலம் கலி அவிந்து அடங்க காழ் சாய்த்து

நொடை நவில் நெடுங் கடை அடைத்து மடமதர்'

என்று கூறும் புறநானூறு துறைமுகங்களில் பெரிய பண்டக சாலைகளை அமைத்துக் கொண்டு நீர் நில வணிகம் புரிந்தனர் (Mohan, 2007).

'வான் முகந்த நீர் மலைப் பொழியவும்'

கடைத்தெருக்களில் பல்வேறு பண்டங்களின் விற்பனைக் குறிக்கும் கொடிகள் காணப்பட்டன (Mohan, 2007).

## வரி வசூல்

வணிகப் பொருட்களுக்கு வரி வாங்குவோர் இருந்தனர். சுங்கத்தால் வாங்கப்படும் வரியை உல்கு என்று பெயரிட்டழைத்தனர்.

## ஆறலைக் கள்வர்

வழிப்பறி செய்வோர் ஆறலை கள்வர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் வில்லாற்றலில் வழிப்போவாரை வருத்தி அவர்களிடமிருந்து பொருளைப் பெற்று வாழ்ந்தனர் என்பதை

'நின்னது தா என நிலை தளர

மரம் பிறங்கிய நளிச் சிலம்பில்' (Rasamanickam, 2002).

## இரவலர்

உடல் உழைப்பினை கொள்ளாமல் இசை கூத்து புலமை போன்றவற்றில் ஏதேனும் ஒன்றினை வெளிப்படுத்தி தேர்கள் களிறு பொன்பொருள் போன்றவற்றை பெற்ற இரவலர்களும் இருந்தனர் என்பதற்கு கீழ்வரும் புறநானூற்றுப் பாடல் சான்றாகும்

'நின் நசை வேட்கையின் இரவலர் வருவர் அது

முன்னம் முகத்தின் உணர்ந்து அவர்

இன்மை தீர்த்தல் வன்மை யானே' (Rasamanickam, 2002).

## தொழில் பிரிவுகள்

தமிழர்களிடையே அக்காலத்தில் பல பிரிவுகள் இருந்தன அவர்கள் செய்யும் தொழில் பற்றியும் வாழும் இடம் பற்றியும் தோன்றின. அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் வலைஞர் ஆயர் உழவர் போன்ற பிரிவுகள் அவை. இசை நாடகம் போன்ற கலைகளையே தொழிலாகக் கொண்ட பொருநர் பாணர் கூத்தர் முதலியவர்கள் இருந்தனர் இவர்கள் செல்வர்கள் இடம் சென்று ஆடிப்பாடி அவர்கள்

கொடுக்கும் பரிசுகளைப் பெற்று உயிர் வாழ்ந்தனர் .உணவு உடை வாழ்விடம் இல்லாமல் திரித்தவர்களும் காணப்பட்டனர். மாடமாளிகை கொண்டு உல்லாச வாழ்க்கை வாழ்ந்த வர்களும் உண்டு கற்றவர்கள் கல்லாதவர்கள் பரவலாகவும் இருந்தனர்.

## நடுகல் வணக்கம்

இறந்த வீரர்களுக்கு நடுகல் வைத்து வழிபட்டனர். இவை தமிழக அளவில் பல கோயில்கள் இருந்தன விக்கிரக வழிபாடு நடைபெற்றுள்ளது தமிழர்கள் சிவன் திருமால் முருகன் காளி முதலிய தெய்வங்களை வழிபட்டனர் தெய்வ நம்பிக்கை மிக்கவராக விளங்கினார் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடல் நடைமுறையில் இருந்துள்ளது

## விருந்தோம்பல்

மதுவிலக்கும் புலால் மறுத்தலும் பண்டைத் தமிழகத்தில் இல்லை.சங்க இலக்கியத்தில் இவை பல இடங்களில் மணம் வீசுகின்றன பழந்தமிழர் மதுவையும் மாமிசத்தையும் சிறந்த உணவாகக் கொண்டார்கள் வசதிபடைத்தவர்கள் தங்களிடம் வந்தவர்களுக்கு முதலில் மதுபானம் படைத்தவர்கள் பின்னர் நல்ல மாமிச உணவுகளை வழங்கினர்

'இழை அணி வனப்பின் இன் நகை மகளிர்

போக்குஇல் பொலங்கலம் நிறையபல்கால்

வாக்குபு தரத்தர வருத்தம் வீட

ஆர் உண்டுபேரஞர் போக்கி

செருக்கோடு நின்ற காலை'

என்று குறிப்பிடுவதிலிருந்து உணரலாம் மகளிர் பொற்கிண்ணத்தில் மதுவை ஊற்றிக் கொடுப்பவர் என்பதனால் அக்கால செல்வர்களின் நிலை வெளிப்படுகிறது (Mohan, 2007).

## இசைக்கலைஞர்கள்

இசைக் கலையில் பாணர்கள் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாய் விளங்கினர் முடியுடை வேந்தர்களும் செல்வங்களையும் குறுநில மன்னர்களையும் நாடிச் சென்று தம்முடைய இசைத் திறமை வாயிலாக பல்வேறு பரிசுகளைப் பெற்றனர்

'உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே

உரன் மலி உள்ளமொடு முனைப்பாழாக

அருங் குறும்பு எறிந்த பெரும் கலவெறுக்கை'

என்ற பாடலில் அறிய முடிகிறது (Annamalai, 2004).

## கூத்துக் கலைஞர்கள்

தனித்தனியான வரலாறுகளை நடித்துக் காட்டுவது கூத்தாகும்

'குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவேதண்ணுமைப்

பின்வழி நின்றது முழ வே'

என்று கூத்துக் கலைப்பற்றி இளங்கோவடிகளும் சிலம்பில் சுட்டுவதை காணமுடிகின்றது (Venkatasamy Nattar, 2018).

## மருத்துவம்

'சங்க கால மக்கள் மருத்துவத்திலும் பயிற்சி பெற்றிருந்தனர்

திருத்தியயாக்கையுள் மருத்துவன் ஊட்டிய

மருந்து போல் மருந்து ஆகி மனன்உவப்ப'

என்பதனால் அறியலாம் (Varatharasan, 1976).

## கட்டிடக்கலை

மக்கள்தங்கள் வாழ்க்கையை வெளிப்படுத்துவதாகக் கட்டிடங்கள் அமைந்தன. கட்டிடக்கலையின் சிறப்புகளைப் பெரிய கோயில்களும் கட்டிடங்களும் மாளிகைகளும் எடுத்துரைக்கும். ஓர் இனத்தின் நாகர செழுமையினை எடுத்துக்காட்டும் சின்னங்களில் குறிப்பிடத்தக்கது கட்டிடக் கலையே ஆகும். கட்டிடங்கள் செங்கல்லால் கட்டப்பட்ட மையைச் சுடுமண் ஓங்கிய நெடு நிலை என மணிமேகலை குறிப்பிடுகின்றது சுவரில் அழகிய வண்ணம் பூசப் பெற்றிருந்தது

'இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென

மணிப்புறா துறந்த மரம் சோர் மாடத்து'

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது (Annamalai, 2004). கோட்டைகள் மண் செங்கல் கருங்கல் போன்ற திடப்பொருள்கள் கொண்டு கட்டப்பட்டன இயற்கை உருக்கி ஊற்றிக் கட்டிடங்களைக் கட்டினர். பாதுகாப்பிற்கு அமைக்கப்பட்ட கோட்டைகளில் எதிரியின் வீரத்தை அறியும் வகையில் ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தன

'யாரு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்

தின்தேர் குழித்த குண்டுநெடுந்தெருவில்'

என்னும் பாடல்களிலிருந்து இதனை அறியலாம் (Mohan, 2007).

## பலசமயத்தவர்

சங்க காலத்தில் பல்வேறு கொள்கையை உடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் அக்காலத்தில் சமணப் பள்ளிகளும் பௌத்தப் பள்ளிகளும் இருந்தன என்பதை

'தண் கேணித் தகை முற்றத்து

பகட்டு எருத்தின் பல சாலை

தவப்பள்ளி தாழ்காவின்

அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்

ஆவுதி நறும்புகை முனைஇ குயில் தம்

மாயிரும் பெடையோடு இரியல் போகி

பூதம் காக்கும் புகல் அருங் கடி நகர்

தாதுஉண் அம் புறவொடு குஞ்சின் சேர்க்கும்'

என்று பட்டினப்பாலை குறிப்பிடவும் (Alis, 2007).

## முடிவுரை

சங்ககால ஆடவர்கள் தனி நிலையிலும்,குடும்ப நிலையிலும் ,அரசுக்கு உதவி புரியும் நிலையிலும் ஆடவர்க்குரிய வீரம் சிறக்க பாடுபட்டனர் என்பதை அடிப்படையாக அமைகின்றதுமக்கள் ஐவகை நிலங்களிலும் தத்தம் தொழில்கள் மேம்பாடு பட்டார்கள் கொல்லர், தச்சர், கருமார் உழுது தொழில் செய்வோர் தம் தொழில் மூலம் வருவாய் ஈட்டி இல்லறம் மாண்டுகள் சிறக்க பாடுபட்டனர். அரசு பணிகளில் அரசியலுக்கு பல்வேறு நிலைகளிலும் பணியாற்றி செம்மையான நல்லாட்சி நடத்தி துணை புரிந்தார்கள் விருந்தோம்பும் பண்பு பெண்களோடு முதல்வரும் தோன்றினார் இசைக் கலைஞர்கள் கூத்து கலைஞர்கள் போற்றப்பட்டனர் சங்ககால மக்களின் மாட்சிமை பொருந்திய சங்ககால ஆடவர்களின் செம்மாந்த வாழ்க்கையை எடுத்துக் காட்டுகின்றது இந்த ஆய்வு

## References


Alis, A., (2007) Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Annamalai, S., (2004) Aganaanooru Moolamum Uraiyum, Koviloor madalayam, Koviloor, India.

Annie Thomas, (2001) Tamil Samugaviyal, International Institute of Tamil Studies, Chennai, India.

Balasubramanian, K.V., (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Balasubramanian, P., (2000) Tamil Ilakkiya Varalaru, Narumalar Pathippagam, Chennai, India

Chidambaranar Samy., (2008) Ettuthogaiyum tamilar panpadum, Arivu publications, Chennai, India.

Mohan, R., (2007) Perumpanatrupadai| Paathupattu, New Century Book House, Chennai, India.

Nagarajan, V., (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Ramathan, (1975) Pathupattu valam, Manivasagar Pathippagam, Chennai, India.

Rasamanickam, M., (2002) Patthupattu Aaraitchchi, Alamu Pathippagam, Chennai, India.

Subramanian, (2008) Sanga Ilakkiyam Sila Paarvaigal, Paari niliyam, Chennai, India.

Varatharasan, M., (1976) Ettuthogai Selvam, Paari niliyam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (2018), Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License